தினகரன்

## இஎஸ்ஐ சார்பில்

# மாற்றுத்திறனாளிக்கு உதவித்தொகை




திருப்பூர், ஜன.11: தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகத்தின் சார்பாக கோவை, ஈரோடு, நீலகிரி, திருப்பூர் மாவட்டங்களில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் காப்பீடு பெற்ற தொழிலாளர்களுக்கு இடர் ஏற்படும் காலங்களில் பணம் மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

தனியார் நிறுவனத்தில் பணியாற்றும் போது ஏற்பட்ட விபத்தில் கோவையை சேர்ந்த மணிகண்டன் என்பவருக்கு ஊனம் ஏற்பட்டது. அவர் இ.எஸ்.ஐ.யில் பதிவு செய்து இருந்ததால்திருப்பூர் கிளை அலுவலகத்தில் நிரந்தர ஊன உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. இதற்கான ஆணையை இஎஸ்ஐ சார் மண்டல அலுவலகத்தின் இணை இயக்குனர் (பொறுப்பு) ரவிகுமார் வழங்கினார். இதில், முதல் நிலுவை தவணை உதவித் தொகையாக ரூ.3 லட்சத்து 55 ஆயிரத்து 691 காசோலையாக இஎஸ்ஐ உதவி இயக்குனர் பெருமாள் பத்மநாபன் வழங்கினார். மேலும், மணிகண்டனுக்கு மாதந்தோறும் ரூ.13 ஆயிரத்து 266 நிர்ணயம் செய்து வழங்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.